அனுப்பப்படுகிறது.

**திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்**
**முன்னிலை திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப.**

செ.மு.க.எண்:45/2021. நாள்:09-11-2021.

| | |
|---|---|
| பொருள்:- | மாற்றுத்திறனாளிகள் நலன் - மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் - திருப்பத்தூர் மாவட்டம். – திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் எல்லைக்கு உட்பட்ட பகுதியான ஜோலார்பேட்டைம ற்றும் திருப்பத்தூர் ஆகிய இரண்டு சட்டமன்ற பகுதியில் மத்திய அரசின் Rastriya Vayosri Yojana (ராஸ்டிரிய வயோஸ்ரீ யோஜனா)திட்டத்தின்கீழ் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் மற்றும் Assisstance to Disabled Persons (ADIP) திட்டத்தின்கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கும் உதவி உபகரணங்கள் வழங்குதல் - பயனாளிகள் தேர்வு முகாம் - பணிகள் ஒதுக்கீடு செய்து உத்தரவு பிறப்பித்தல் - தொடர்பு... |
| பார்வை:- | 1. திருவண்ணாமலை பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் கடிதம் எண்: TVMMP/487. Dated: 06-01-2021.<br>2. Sr.Manager and Unit Head, Artificial Limbs Manufacturing Corporation of India (ALIMCO) Auxillary Proddution Centre, Bangalore – 560013. Ref: AAPC/BGL/MB/918/AZ. Dated: 12-10-2021.<br>3. மாவட்ட ஆட்சித்தலைவர் திருப்பத்தூர் மாவட்டம் அவர்களின் ஒப்புதல் கடிதம் ந.க.எண்:45/2021.நாள்:09-11-2021.<br>4. மாவட்ட ஆட்சித்தலைவர் திருப்பத்தூர் மாவட்டம் அவர்களின் ஒப்புதல் கடிதம் ந.க.எண்:3102/2021.நாள்:01-11-2021. திருவண்ணாமலை பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் நேரடி செய்தி. நாள்; 09-11-2021. |

**ஆணை:**

பார்வை 1இல் காணும் திருவண்ணாமலை பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் கடித்தின்படி, திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் எல்லைக்கு உட்பட்ட பகுதியான ஜோலார்பேட்டைம ற்றும் திருப்பத்தூர் ஆகிய இரண்டு சட்டமன்ற பகுதியில் மத்திய அரசின் Artificial Limbs Manufacturing Corporation of India G.T.Road, Knapur. என்கிற நிறுவனத்தின் மூலம் திருப்பத்தூர் மாவட்டத்தில் மூத்தகுடி மாற்றத்திறனாளிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு முகாம்கள் நடத்தி அதன் வாயிலாக தகுதியான மாற்றுத்திறனாளிகளை கண்டறிந்து அவர்களுக்கு பல்வேறு வகையான உதவி உபகரணங்கள் மருத்துவ முகாம்கள் வாயிலாக வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்.

பார்வை 2 இல் காணும் Artificial Limbs Manufacturing Corporation of India Bangalore அவர்களின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி, மத்திய அரசின் Rastriya Vayosri Yojana (ராஸ்டிரிய வயோஸ்ரீ யோஜனா) திட்டத்தின்கீழ் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள 60 வயதிற்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கும் மற்றும் Assisstance to Disabled Persons (ADIP) திட்டத்தின்கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு 1 மற்றும் 2இல் காணும் உதவி உபகரணங்கள் வழங்க ஏதுவாக மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ மதிப்பீடு முகாம்

23-11-2021 அன்று திருப்பத்தூர் இரயில்வே ஸ்டேசன் ரோடில் அமைந்துள்ள சைவ வேளாலர் திருமண மண்டபத்திலும் மற்றும் 24-11-2021 அன்று ஜோலார்பேட்டை இரயில்வே நிலையம் அருகில் அமைந்துள்ள ராஜராஜேஸ்வரி மஹாலிலும் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடத்தி அதன்மூலம் தகுதியான மாற்றுத்திறனாளிகள் தேர்வுசெய்யப்பட உள்ளது.

எனவே மாற்றுத்திறனாளிகளுக்கான இம்மருத்துவ மதீப்பீடு முகாமினை சிறப்பாக நடத்திடும் பொருட்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு கீழ்க்கண்டவாறு பணிகள் ஒதுக்கீடு செய்து இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

| வ. எண் | அலுவலர் | பணிகள் குறித்த விபரம் |
|---|---|---|
| 1 | இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) | முகாம் நடைபெறும் நாள் மற்றும் இடத்திற்கு எலும்பு முறிவு / மனநலம் / கண் / காது மூக்கு தொண்டை / குழந்தைகள் நல மருத்துவர் ஆகிய மருத்துவர்களை அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளுதல் |
| 2 | திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) | மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு சுய உதவிக்குழு அமைத்து கடனுதவி பெற்று தருதல் பணி மேற்கொள்ள வேண்டுதல் |
| 3 | முதன்மை கல்வி அலுவலர் | அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் வாயிலாக அனைவருக்கும் கல்வி சிறப்பாசிரியர்களை உரிய மாற்றுத்திறனாளிகளுடன் முகாமில் பங்கேற்று முகாமிற்கு உதவி புரிதல் தொடர்பாக |
| 4 | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) | முகாமில் கலந்து கொள்ளும் Alimco நிறுவன அலுவலர்கள் தங்குவதற்கு திருப்பத்தூர் விருந்தினர் மாளிகையில் முகாம் நாட்களில் (22-11-2021 முதல் 25-11-2021 வரை) இரண்டு அறைகள் ஒதுக்கீடு செய்தல் மற்றும்<br>முகாமிற்கு Alimco நிறுவன அலுவலர்கள் சென்று வர ஏதுவாக ஓட்டுநர் மற்றும் எரிபொருளுடன் கூடிய வாகன வசதியுடன் ஒதுக்கீடு வசதி செய்து தருதல் |
| 5 | செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் | முகாம் தொடர்பான பேனர், பணிகளை அலுவலர்களோடு இணைந்து செயல்படுத்தவும் மற்றும் விளம்பரம் செய்திட வேண்டுதல் |
| 6 | மாவட்ட வேலைவாயப்பு அலுவலர் | மாற்றுத்திறனாளிகளை முகாமில் கண்டறிந்து தகுதியானவர்களுக்கு Un Employement Allowance வழங்கும் பணி மேற்கொள்ளுதல் |
| 7 | மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் | முகாம் செயல்படுத்தும் அலுவலராக ஒருங்கிணைந்து (NODAL OFFICER) செயல்படவேண்டும் |
| 8 | மாவட்ட மேலாளர் (தாட்கோ) | ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு அத்துறையின் சார்பில் உரிய திட்ட பயன்களை தகுதியின் அடிப்படையில் பெற்று தர கோருதல் |
| 9 | திட்ட அலுவலர் (குழந்தைகள் வளர்ச்சி திட்டம்) | அங்கன்வாடி பணியாளர்களுடன் அனைத்து விதமான மாற்றுத்திறனாளிகளுக்கு தகவல் தெரிவித்து முகாமிற்கு அழைத்து வரவேண்டுதல் |
| 10 | மாவட்ட சமூகநல அலுவலர் | அனைத்து சமூக நல விரிவாக்க அலுவலர்களை முகாமில் பங்கேற்க செய்து உதவிட கோருதல் |
| 11 | வட்டாட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆம்பூர், நாட்றம்பள்ளி | முகாமில் கலந்து கொள்ளும் அனைத்து அலுவலர்களுக்கும் உணவு மற்றும் தேநீர் ஏற்பாடு செய்தல் மற்றும் படிவங்கள் பெற்றுத்தருதல் |
| 12 | அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள் | அந்தந்த பகுதியல் வாழும் மாற்றுத்திறனாளிகளுக்கு தண்டோரா மூலம் அறிவிப்பு செய்தல் |

அனைத்து அரசுத்துறை அலுவலர்களும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளில் எந்தவித காலதாமதம் மற்றும் தொய்வின்றி இம்முகாம் செயல்படுத்தும் அலுவலரோடு (NODAL OFFICER) இணைந்து இம்முகாமில் சிறப்பாக செயலாற்றும்படி ஆணையிடப்படுகிறது.

இணைப்பு: 1 மற்றும் 2 உதவி உபகரணங்கள் பட்டியல்கள்.

Anand kushwaha
9.11.21

3/3

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருப்பத்தூர் மாவட்டம்.

பெறுநர்:

சம்பந்தப்பட்ட அலுவலர்கள்

நகல்

9/11/21
DDAWO/TPT

1. அரசு செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை- 09. த.ப.ச.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை- 05. த.ப.ச.
3. மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், திருப்பத்தூர்
4. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள அனைத்து அலுவலர்கள், திருப்பத்தூர் மாவட்டம்.